செ.வெ.எண்:19/ஜனவரி நாள்: 13.01.2016

# செய்திக்குறிப்பு

தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் 11,12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர், மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கான கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளது.

இராமநாதபுரம் மற்றும் பரமக்குடி கல்வி மாவட்டத்தில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளில் 11,12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கிடையேயும், கல்லூரிகளின் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கிடையேயும் பேச்சாற்றலையும், படைப்பாற்றலையும் வளர்க்கும் நோக்கில் மாவட்ட அளவில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்க ஆணையிடப் பட்டுள்ளது.

இதன்படி இராமநாதபுரம் மாவட்டத்தில் மாவட்ட அளவில் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கான போட்டிகள் 27.01.2016 அன்று புதன்கிழமையன்று காலை 9.00 மணிக்கும், மேல்நிலைப் பள்ளிகளில் 11,12 ஆம் வகுப்பில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கான போட்டிகள் 28.01.2016 அன்று வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கும் இராமநாதபுரம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தமிழ் மன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் நடைபெறும்.

**பள்ளிகளுக்கான போட்டியின் விதிமுறைகள்**

1) மாவட்டத்திலுள்ள அனைத்து மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 11,12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்கள் இப்போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.
2) ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் ஒரு போட்டிக்கு ஒருவர் வீதம் மூன்று பேர் மட்டுமே இப்போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
3) போட்டிகளில் பங்குபெறும் மாணவ, மாணவியர் பள்ளித் தலைமையாசிரியரிடமிருந்து உரிய அனுமதிக் கடிதத்துடன் வருதல் வேண்டும்.
4) மாணவர்கள் போட்டி நாளன்று காலை 8.30 மணிக்குள் தமது வருகையைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.
5) போட்டிக்கான தலைப்புத் தமிழ் மொழி, தமிழ் இலக்கியம் குறித்த வகையிலேயே அமையும்.
6) போட்டிக்கான தலைப்பு போட்டி தொடங்கும் நேரத்தில் அறிவிக்கப்படும்.
7) முடிவுகள் அன்றே அறிவிக்கப்படும் முதல் பரிசு ரூ.10,000 மும், இரண்டாம் பரிசு ரூ.7000 மும் வழங்கப்படும். மாவட்ட அளவில் முதல் பரிசு பெறும் மாணவ, மாணவியர் மாநில அளவில் சென்னையில் நடைபெறும் போட்டிகளுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

**கல்லூரிகளுக்கான போட்டியின் விதிமுறைகள்**

1) மாவட்டத்திலுள்ள அனைத்துக் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் இப்போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.
2) ஒவ்வொரு கல்லூரிகளிலிருந்தும் ஒரு போட்டிக்கு ஒருவர் வீதம் மூன்று பேர் மட்டுமே இப்போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
3) போட்டிகளில் பங்குபெறும் மாணவ, மாணவியர் கல்லூரி முதல்வரிடமிருந்து உரிய அனுமதிக் கடிதத்துடன் வருதல் வேண்டும்.
4) மாணவர்கள் போட்டி நாளன்று காலை 8.30 மணிக்குள் தமது வருகையைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.
5) போட்டிக்கான தலைப்புத் தமிழ் மொழி, தமிழ் இலக்கியம் குறித்த வகையிலேயே அமையும்.
6) போட்டிக்கான தலைப்பு போட்டி தொடங்கும் நேரத்தில் அறிவிக்கப்படும்.
7) முடிவுகள் அன்றே அறிவிக்கப்படும். முதல் பரிசு ரூ.10,000 மும், இரண்டாம் பரிசு ரூ.7000 மும் வழங்கப்படும். மாவட்ட அளவில் முதல் பரிசு பெறும் மாணவ, மாணவியர் மாநில அளவில் சென்னையில் நடைபெறும் போட்டிகளுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

மேலும் போட்டிகள் தொடர்பாக தகவல்களை அறிய விரும்புவோர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் திரு.நீ.மேகநாதன் அவர்களை அணுகி விவரம் தெரிந்து கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.நந்தகுமார்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**